செய்தி வெளியீடு எண்.41 நாள்.25.05.2021

<u>பத்திரிக்கை செய்தி</u>

சென்னை மாவட்டத்தில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் குழந்தைகளை பாதுகாக்க சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக கொரோனா பெருந்தொற்றால் பெற்றோரை இழந்த குழந்தைகள், கொரோனா பெருந்தொற்றுக்கு சிகிச்சைப் பெற்று வரும் பெற்றோரின் குழந்தைகள், உணவு மற்றும் உறைவிடம் தேவைப்படும் குழந்தைகள், மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள், ஆற்றுப்படுத்துதல் மற்றும் உளவியல் ஆலோசனை தேவைப்படும் குழந்தைகள் போன்ற பல்வேறு சூழ்நிலைகளில் இருக்கின்ற குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை பூர்த்தி செய்ய சென்னை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் குழந்தைகளுக்கான இலவச தொலைப்பேசி எண்.1098, சென்னை மாவட்டத்தில் செயல்படும் குழந்தைகள் நல குழுவை கீழ்காணும் எண்களில் தொடர்பு கொள்ளலாம். மேலும் இதுபோன்று சூழ்நிலையில் உள்ள குழந்தைகளை கண்டால் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**<u>தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைப்பேசி எண்:</u>**

1. மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர்,
   மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
   எண்.58, சூரியநாராயண சாலை,
   இராயபுரம், சென்னை-13.
   மின்னஞ்சல்: dcpschennai2@gmail.com
   **9944290306/044-25952450.**
2. **குழந்தைகளுக்கான இலவச தொலைப்பேசி எண்.**1098.
3. **குழந்தைகள் நலக் குழு (வடக்கு மண்டலம்) தலைவர் -** 9840135503
4. **குழந்தைகள் நலக் குழு (தெற்கு மண்டலம்) தலைவர் -** 9840083620
5. **குழந்தைகள் நலக் குழு (மத்திய மண்டலம்) தலைவர் -** 9841889069

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு
செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-01